**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 04–ம் நாள்
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை
*******

**அசல் வழக்கு எண். 82/2025**
**CNR.No.TNMY-07000097-2025**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா மற்றும் நகரம் தியாகி சாமிநாதன் தெரு, கதவு எண்.12A என்ற முகவரியில் வசிக்கும் திருப்பதி செட்டியார் குமாரர், வயது 60 உள்ள திருஞான அமுதன்.

**....வாதி**

**...எதிர்...**

1. சீர்காழி டி.மு.இலாக்கா மற்றும் நகரத்தில் இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலகம் சார்பாக அதன் வட்டாட்சியர்.
2. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்காவில் இயங்கி வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சார்பாக அதன் மாவட்ட ஆட்சியர்.

**...பிரதிவாதிகள்**

கடந்த 20.09.2017ல் இறந்து போன அண்ணாமலை என்பவருக்கு வாதி வாரிசு என்ற விளம்புகை பரிகாரம் வழங்க கோரியும், மேற்படி விளம்புகை பரிகாரத்தினையொட்டி 1ம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்க வேண்டுமென செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 17.04.2025 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 17.04.2025 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 20.09.2017, 26.11.2024, 27.01.2025 ஆகிய தேதிகளில் சீர்காழி தாலுக்கா மற்றும் நகரம் தியாகி சாமிநாதன் தெருவில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |

| | |
|---|---|
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | இறந்துபோன அண்ணாமலைக்கு வாதி வாரிசு என்ற விளம்பல் பரிகாரத்திற்காக வாதியின் வழக்கு பொருமானம் ரூ.5000/- என நிர்ணயித்து அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.150/-ம், இறந்த அண்ணாமலைக்கு வாதி வாரிசு என வாரிசு சான்று வழங்க 1ம் பிரதிவாதிக்கு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வாதியின் பொருமானம் ரூ.1000/- என நிர்ணயித்து அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.30/-ம், ஆக மொத்தம் வழக்கு பொருமானம் ரூ.6000/- என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.180/- நீ.ம.க.ச பிரிவு 25(d) மற்றும் 27(c)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 12.03.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி. S. பிரகதி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## <u>தீர்ப்பாண</u>

1. இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது.

2. வாதி தான் கடந்த 20.09.2017ல் இறந்து போன அண்ணாமலை என்பவரின் வாரிசு என விளம்புகை செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. அவ்விளம்புகை பரிகாரத்தினையொட்டி இறந்து போன அண்ணாமலை என்பவரின் வாரிசு சான்றை வாதிக்கு, 1ம் பிரதிவாதி இன்றிலிருந்து இரண்டு மாதத்திற்குள் (18.05.2026) வழங்க வேண்டும் என செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

4.செலவுத்தொகை இல்லை.

**வாதி, பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஓம்/- மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை</u>**

அசல் வழக்கு எண்.82/2025
நாள்.18.03.2026.